பக்கங்கள்:10 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 11 புதன்கிழமை 25.05.2022 கதிர் 201

இனி து ரகசியம் அல்ல!

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு இது போதாத காலம் போலும். வழக்கு, வம்பு, தும்பு என்று விவகாரங்கள் அவரைத் தேடி வருகின்றன. அல்லது தமது பண்பியல்பால் அவற்றை நாடி அவர் போகின்றார். ☞2

# எரிபொருளைச் சந்தைக்கு விடுவிப்பதில் கஞ்சத்தனம்

## அதனால்தானாம் நீண்ட வரிசை காத்திருப்பு, இழுபறி சர்ச்சைகள்



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை இந்திய எண்ணைக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றிடம் போதுமான அளவு டீசல் மற்றும் பெற்றோல் கையிருப்புக்கள் இருந்தபோதிலும் சந்தைக்குப் போதுமான அளவு டீசல் மற்றும் பெற்றோல் விநியோகிக்க விடுவிக்கப்படாமையே மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகளில் நிற்பதற்குக் காரணம் என எதிர்க்கட்சித் தொழிற்சங்கத் தலைவர் ஆனந்த பாலித குற்றம் சாட்டியுள்ளார். ☞2

## உள்ளூராட்சி சபைகளை கலைக்கக் கோரிக்கை!

உள்ளூராட்சி சபைகளை உடனடியாக கலைத்து விட்டு, விசேட ஆணையாளர்ளை நியமித்து, அவர்களின் கீழ் உள்ளூராட்சி சபை நிர்வாகங்களைக் கொண்டு வருமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடு எதிர்நோக்கும் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உள்ளூராட்சி மன்றங்களில் பெரிய எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இருப்பது சுமையாக இருப்பதாக இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்தின் பிரதித் தலைவர் தம்மிக்க முத்துகல தெரிவித் துள்ளார்.

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் ஒரு வருடத்தினால் நீடிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நீடிப்பு ☞2

## அமைச்சுகளின் செயலர்கள் 23 பேர் நியமனம் பெற்றனர்

அமைச்சரவை அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள் 23 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர். கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதிமாளிகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

செயலாளர்களாக நியமனம் பெற்றவர்களில் ஒருவர் கூட சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ்.மாநகர சபையைக் கலைக்க காய் நகர்த்துகின்றாராம் ஆளுநர்!

யாழ்ப்பாணம் ஆரியகுளத்தில் வெசாக் அலங்காரங்களை அமைப்பதற்கு அனுமதி மறுத்த விவகாரம் தொடர்பில் ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தீர்மானித்துள்ளார் என்று நம்பகரமாக அறியமுடிகின்றது. இது தொடர்பில் கடந்த சில தினங்களாக அவர் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

ஆரியகுளத்தில் வெசாக் அலங்காரங்களை அமைப்பதற்குப் படையினர், யாழ்.மாநகர சபையிடம் அனுமதி கோரியிருந்தனர். ஆரியகுளத்தில் எந்தவொரு மத அடையாளங்களுக்கும் இடமளிப்பது ☞2



## வயம்ப பல்கலை மாணவர்கள் 35 பேர் கைதாகிப் பிணையில்

வயம்ப பல்கலைக்கழக மாணவர்கள் 35 பேரை நேற்று முன்தினம் இரவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். நேற்றுக் காலை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பகிடிவதை சம்பவம் தொடர்பில் ஏற்பட்ட மோதலுடன் தொடர்புடைய மாணவர்களே கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ☞2

## ஜோன்ஸ்டன் நேற்று சி.ஐ.டியில் வாக்குமூலம் அவரைக் கைது செய்யக் கோரி கவனவீர்ப்பு!





கொழும்பு, மே 25

நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி சுமார் நான்கரை மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கியப்பின் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

இதேவேளை, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை ☞2

## சீனத் தூதுவருக்குக் கிழக்கில் வெற்றிலை வைக்கிறார் ஆளுநர்



சீன மக்கள் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் கியூ சென்ஹொங் நேற்றுக் காலை திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தை சந்தித்தார்.

அண்மையில் ☞2

## உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதியுடன் பிரதமர் பேச்சு



உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி டாக்டர் அலகா சிங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். ☞2

## தேசிய அரசு அமைந்தால் நிதி அமைச்சை ஏற்பேன்

### கலாநிதி ஹர்ஷ டி சில்வா கூறுகிறார்



நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளினதும் பங்களிப்புடன் தேசிய அரசாங்கம் அமைக்கப்படுமாயின் நிதி அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்ளவதற்குத் தான் தயாராக உள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் ☞2

## பஸ் கட்டணம் அதிகரித்தது

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்து பஸ் கட்டணங்களையும் 19.5 வீதத்தால் அதிகரிக்கப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. அதற்கமைய ஆகக் குறைந்தபட்ச பஸ் கட்டணம் 27 ரூபாவில் இருந்து 32 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆகக் கூடிய கட்டணம் ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய விவகாரத்தை ஒட்டி நேற்று சி.ஐ.டிக்கு முன்னால் ஆஜராகி அவர் வாக்குமூலம் அளித்தார். அந்தச்சமயத்தில்அவர்கைதுசெய்யப்படலாம் என்று சந்தேகம் இருந்தது. ஆனால் இப்போதைக்கு கைது நடக்கவில்லை. விசாரணையின் போக்கில் இவ்விடயத்தை ஒட்டி அவர் கைது செய்யப்பட மாட்டார் என்று இப்போதைக்குக் கூறவும் முடியாது.

இதற்கிடையில் லஞ்ச ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரிக்கும் ஆணைக்குழு முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக ஐந்து பாரிய ஊழல் குற்றங்கள் தொடர்பான குற்ற பத்திரங்களைத் தயார் செய்திருப்பதாக உள்வீட்டுத் தகவல்கள் கசிந்திருக்கின்றன.

மேலிடத்து ஆசீர்வாதங்கள், தகவல்களுடன்தான் இவை தயாராகியிருக்கின்றன என்றும் ஒரு தகவல் உள்ளது. கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்த குற்றச்சாட்டுப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் போது, மிக நெருக்கடியான காலகட்டத்தை ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ எதிர்கொள்ள வேண்டியவராவார் எனக் கூறப்படுகிறது.

ஏற்கனவே முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேக்கு எதிராக ஒரு வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடக்கின்றது.

அது போன்ற ஐந்து வழக்குகளை ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ எதிர்கொள்ளப்போகின்றார். அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன ஆகியோருக்கு எதிராகவும் தலா ஒவ்வொரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட இருக்கின்றன எனத் தெரிகின்றது. அவர்களுக்கு எதிராகவும் குற்றப் பத்திரம் தயார்.

உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர் ஈவா வனசுந்தர (தலைவர்), ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர, ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ் மாஅதிபர் சந்திர வாகிஷ்ட ஆகியோரை ஆணையாளர்களாகக் கொண்டதே லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணை ஆணைக்குழு. சட்ட விவகாரங்களில் தேர்ச்சிபெற்ற புலமையாளர்கள் கொண்ட இக்குழு இந்த வழக்குகளுக்கான குற்றப்பத்திரங்களைத் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதால், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தரப்பினருக்கு அது நிச்சயமாகக் கழுத்தை இறுக்கும் சுருக்குப் போல விழும் என்று கருதப்படுகின்றது.

வினை விதைத்தவன் அதனை அறுத்துத்தானேயாக வேண்டும்...?

★ ★ ★

ஹரீன் பெர்னாண்டோ இளம் அரசியல்வாதி. 44 வயது. ஏற்கனவே எம்.பியாகவும், அமைச்சராகவும் இருந்த அனுபவம் உண்டு. ஏழரை மாதங்கள் ஊவா மாகாண முதலமைச்சராகவும் இருந்தவர்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள்சக்தியின்தேசியப்பட்டியல் எம்.பியாக இருந்துகொண்டு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் அவர் அரசையும் நேற்று வரை மோசமாக - மிக மோசமாக - விமர்சித்தவர். இப்போது குத்துக்கரணம் அடித்து அதே கோட்டாபயவிடம் அமைச்சர் பதவி வாங்கியவர். அந்த அமைச்சர் பதவி சத்தியப்பிரமாணத்தை ஒட்டி அவர் நடத்திய திருகுதாள அறிவிப்புகள் அம்பலமாகி சந்தி சிரிக்கின்றது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி கோட்டாபயவின் தலைமையில் அவர் பங்குபற்றிய முதல் அமைச்சரவை கூட்டம். 'அமைச்சரவை கூட்டுப்பொறுப்பு' என்றால் என்ன என்பது குறித்து 'நல்லமொழியில்' ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவருக்குப் பாடம் எடுத்து அனுப்பி இருக்கின்றார் என்று தகவல்.

போதாக்குறைக்கு மற்றொரு சிரேஷ்ட அமைச்சரான பிரசன்ன ரணதுங்கவும் தன்பாட்டுக்கு ஒத்து ஊதி போட்டுக் கொடுத்தாராம். அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்புடைய அமைச்சர்கள் ஒவ்வொருவரும் அதை மறந்து, தம் இஷ்டப்படி - தம்மிச்சைப்படி - போகின்ற இடங்களிலெல்லாம்கண்ணைமூடிக்கொண்டு, வாய்க்கு வந்தபடி பேசியமையால்தான் முன்னைய அமைச்சரவைக்கு அந்தக் கதி நேர்ந்தது என்பதை தெளிவுபடுத்தினார் பிரசன்ன ரணதுங்க.

பதில் கூறாமல் தலையசைத்துக் கேட்டுக் கொண்டு வர வேண்டிய நிலைமை ஹரீனுக்கு. ஐக்கிய மக்கள் சக்தியைப் பகைத்துக்கொண்டு, இந்தப் பக்கத்திற்கு - ஆளும் தரப்புக்கு - குத்துக்கரணம் அடித்தாயிற்று. இனித் திரும்பிப் போக முடியாது. புகுந்த வீட்டில் வசவு கிட்டினாலும் பொறுத்து, சமாளித்துப் போக வேண்டிய நிலைமை.

இப்போது சஜித் என்ற தலைவர் பெரும் கடவுள் போல ஹரீனுக்குத் தெரிவார் என நினைக்கிறேன். 'இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே...!' என்பது இப்போது அவருக்குப் புரிய தொடங்கி இருக்கும்.

– மின்னல் –

## ஜோன்ஸ்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உடனடியாகஜ் கைது செய்யுமாறு கோரி குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மே 09 ஆம் திகதி காலிமுகத்திடல் மற்றும் கொள்ளுப்பிட்டி பிரதேசங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்றுக்காலை குற்றப்புலனாய்வுப்பிரிவிற்கு வருகை தந்தார்.

அவரைக் கைது செய்யக் கோரும் போராட்டம் காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜொன்ஸ்டன் பெர்னாண்டோவே காலிமுகத் திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியதன் பிரதான சூத்திரதாரி என்று நேற்றைய கவனயீர்ப்புப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

அவரை கைது செய்து விசாரணை நடத்த வேண்டும் எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். ஆனால் அது நடக்கவில்லை.

## தேசிய அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் நிதியமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டாலும் நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது. நாட்டின் பிரச்சினை தீரவேண்டுமானால் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். நான் நிதியமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டால் அது எனக்கு தனிப்பட்ட வெற்றியாக இருக்கும். ஆனால் அது நாட்டுக்குக் கிடைத்த வெற்றி அல்ல.

நாட்டுக்காக என்னை அர்ப்பணிப்பதற்கு நூறு சதவீதம் தயாராக இருக்கிறேன். நான் நிதியமைச்சைப் பொறுப்பேற்க வேண்டுமாயின் தேசிய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அரசாங்கத்தில் சுயாதீனமாக செயற்படுபவர்களுடன் இணைவதை தேசிய அரசாங்கம் என்று சொல்ல முடியாது. சிறீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள்சக்தி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போன்ற அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்று சேர வேண்டும். – என்றார்.

## சீனத் தூதுவருக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கொழும்பில் இடம்பெற்ற ஆளுநருக்கும் சீனத் தூதுவருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது ஆளுநரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய கிழக்கு மாகாணத்திற்கான விஜயத்தையும் அவர் மேற்கொண்டுள்ளார்.

ஆளுநர் அலுவலகத்திற்கு வந்த சீன தூதுவருக்குஅங்குவரவேற்பளிக்கப்பட்டது .

அதனைத் தொடர்ந்து சீனத் தூதரகத்தினால் கிழக்கு மாகாணத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ஐயாயிரம் உலர் உணவுப் பொதிகளை தூதுவர் உத்தியோகபூர்வமாக விநியோகித்தார்.

பின்னர் கிழக்கு மாகாணத்தில் புதிய முதலீடுகள் மூலம் அபிவிருத்தி செய்யக்கூடிய வளங்கள் குறித்து சீனத் தூதுவர் மற்றும் அவரது குழுவினருக்கு விளக்கமளித்தார். மேலும், புதிய முதலீடுகளை மேற்கொள்ளக் கூடியதுமான மாகாணத்தின் வளங்கள் தொடர்பான விசேட கையேட்டை ஆளுநர் அவர்கள் தூதுவரிடம் இதன் போது வழங்கினார்.

இதில் திருகோணமலை மாவட்ட செயலாளர் உட்பட பல உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## உலக சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கையில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்டுள்ள அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு உலக சுகாதார அமைப்பு முழுமையான ஆதரவை வழங்கும் என இந்த சந்திப்பின்போது உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதி பிரதமருக்கு உறுதி அளித்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பின் இந்த உதவித்திட்டத்தின் முதற்கட்டமாக எழுபது கோடி ரூபா பெறுமதியான உதவிகளை இலங்கை பெற்றுக்கொள்ளவுள்ளது.

## யாழ்.மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இல்லை என்று மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்ததால் அனுமதி வழங்க முடியாது என்று பதிலளிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து வடக்கு மாகாண ஆளுநர், வெசாக் அலங்காரங்களை அமைக்க அனுமதி வழங்க வேண்டும் என்று மாநகர சபை பதில் மேயரிடம் நேரடியாகக் கோரியிருந்தார். அதற்கு அமைவாக இணையவழியில் மாநகர சபை உறுப்பினர்களின் கூட்டம் நடத்தப்பட்டது. அதன்போது முன்னரே அனுமதி கோரவில்லை என்றும், வேண்டுமென்றே வெசாக் அன்று அனுமதி கோரியதாகவும் குறிப்பிட்ட உறுப்பினர்கள் எழுத்துமூலம் அனுமதி கோரினால் ஆராயலாம் என்றும் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், தனது உத்தரவை உதாசீனப்படுத்தியதால், மாநகர சபையைக் கலைப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் தீவிர ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ளார். அதற்குரிய வழிகாட்டல்கள் கொழும்பைத் தளமாகக் கொண்ட சில தரப்புக்களால் வழங்கப்பட்டுள்ளன என்று அறியமுடிகின்றது.

அதற்கு அமைவாக ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை ஒன்றை முன்னெடுக்க ஆளுநர் தீர்மானித்துள்ளார் எனத் தெரியவருகின்றது. இதற்காக சில ஓய்வுபெற்ற நீதிபதிகளையும் அவர் அணுகியுள்ளார் என்றும் செய்தி வட்டாரங்கள் சில தகவல் வெளியிட்டுள்ளன.

## எரிபொருளைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சந்தைக்கு போதுமான அளவு டீசல் மற்றும் பெற்றோல் கையிருப்புக்கள் விநியோகிக்கப்படுவதாக வலு சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தொடர்ந்து கூறி வருகின்றார். ஆனால் நாடு தொடர்ந்தும் எரிபொருளின் கடுமையான பற்றாக்குறையை அனுபவித்து வருகின்றது.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ளஎரிபொருள்நிரப்புநிலையங்களில் டீசல் மற்றும் பெற்றோலுக்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர்.

எதிர்காலத்தில் புதிய பெறுகைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு உறுதியாகத் தெரியாதமையினால் சந்தையில் டீசல் மற்றும் பெற்றோல் கையிருப்புக்கள் குறைந்த போதிலும் போதுமான அளவு கையிருப்புக்கள் மீள விநியோகிக்கப்படவில்லை; விடுவிக்கப்படவில்லை.

பெற்றோல் மற்றும் டீசலை விடுவிப்பதற்கான கட்டுப்பாடுகளை வலு சக்தி அமைச்சு உடனடியாக நீக்க வேண்டும். கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் சந்தையைக் கட்டுப்படுத்த முடியாது. இத்தகைய நடவடிக்கைகள் கறுப்புச் சந்தையை உருவாக்குவதற்கு மட்டுமே உதவும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 120 ஆயிரம் மெற்றிக் தொன் மற்றும் இலங்கை இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் 157 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் மற்றும் டீசலை சேமித்து வைக்கக்கூடிய களஞ்சிய வசதிகளைக் கொண்டுள்ளன. அரசாங்கத்தின் முட்டாள்தனம் காரணமாக மக்கள் பாதிக்கப்படக்கூடாது. - என்றார்.

## பஸ் கட்டணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

3,370ரூபாவிலிருந்து4,025ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## வயம்ப பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக பாதுகாப்பு அதிகாரி ஒருவரைத் தாக்கினர் எனவும் அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பொருளாதாரத்திற்கு கட்டுப்படியாகக் கூடிய தீர்மானம் அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

சில மாநகர சபைகளின் மேயர்களின் மாதாந்தச் செலவு ஒரு மில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளதாகவும், அரசாங்க செலவினங்களைக் குறைக்கும் வகையில், இவ்வாறான தேவையற்ற செலவினங்களைக் குறைக்க வேண்டியது மிகவும் அவசியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் உணவுவகைகள்
இற்கு விசேட விலைக்கழிவாக
பெற்றுக்கொள்ளலாம்.
புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
விருந்துபசார மண்டபம்
Online
சகலவிதமான
வசதிகளுடனும்
BANQUET HALL
MEALS HALL
FULL OPTION
DESSERT
Cream Cup - 60/=
Cream & Fruit Salad - 100/=
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## ஆள்களை மாற்றும் கோட்டா

**கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலத்திலிருந்து பதவிகளுக்குப் புதிது புதிதாக ஆள்களை நியமிப்பதுதான் அவரது வேலையாகப் போய் விட்டது போலும்.**

**அவரது இரண்டரை வருட ஆட்சிக் காலத்தில் மூன்று நீதியமைச்சர்கள் இருந்து போய் விட்டார்கள் – மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, அலி சப்றி. இப்போது நான்காவது நிதி அமைச்சருக்குப் பார்த்திருக்கின்றார்கள்.**

**இந்த இரண்டரை வருடங்களில் மூன்று மத்திய வங்கி ஆளுநர்கள்.**

**கல்வி அமைச்சர்கள் நால்வர் – டலஸ் அழகப்பெருமா, ஜி.எல்.பீரிஸ், தினேஷ் குணவர்த்தனா, இப்போது சுசில் பிரேமஜயந்த.**

**இப்படி சுகாதார அமைச்சு போன்ற பலவற்றுக்கும் அடிக்கடி அமைச்சர்கள் மாற்றப்பட்டார்கள்.**

**விவசாயிகளின் உரம் தொடர்பான விடயத்தில் சர்ச்சைக்குரிய முடிவுகளை எடுத்து நாட்டை நட்டாற்றில் விட்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அவரின் அந்தத் தூரநோக்கற்ற – மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய – விவேகமற்ற – தீர்மானத்தை எதிர்த்த காரணத்தினால் என்னவோ அந்த அமைச்சுக்கு இந்தக் காலகட்டத்தில் நான்குக்கு மேற்பட்ட செயலாளர்கள் மாற்றப்பட வேண்டியேற்பட்டது.**

**நாட்டின் இன்றைய மோசமான நிலைமைக்குக் காரணம் ஆட்சித் தலைவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே என்பது மக்களின் கணிப்பு. அதனால்தான் அவர்களின் கோபம் – சீற்றம் – எரிச்சல் – விசனம் – இங்கு 'கோட்டா கோ ஹோம்' ஆக வெடித்து நிற்கின்றது.**

**ஆனால் அவரோ அந்த யதார்த்தத்தை ஏற்க மறுத்து, பதவியில் ஒட்டி நிற்பேன் என்று அடம் பிடிக்கின்றார். தாம் மாறுவதற்கு மறுத்து, மற்றைய எல்லோரையும் மாற்றிக் கொண்டிருக்கின்றார்.**

**தம்மை அரசியலுக்குக் கூட்டி வந்து, வழிகாட்டி, இந்த ஜனாதிபதிப் பதவியில் அமர்த்திய தமது மூத்த சகோதரனும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவைக் கூட பிரதமர் பதவியிலிருந்து வீட்டுக்கு அனுப்பி விட்டார். ஆனால் தாம் மட்டும் மாறுவதற்கு மறுத்து நிற்கின்றார்.**

**கடைசியாக வெடித்த மக்கள் சீற்றத்தை அடுத்து, அமைச்சரவையைக் கலைத்துப் புதிய அமைச்சரவை – புதிய அரசு – என்றார். அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து அமைப்பேன் என்றார்.**

**ஆனால் அதுவும் நடக்கவில்லை. ஒரேயொரு எம்.பியுடன் இருந்த ஐ.தே.கட்சித் தலைவரையும், பிற பிரதான கட்சிகளில் இருந்த ஓரிருவரையும் மட்டுமே அவரால் பிடுங்கி எடுக்க முடிந்தது. பல கட்சிகள் சேர்ந்த அரசை அவரால் உருவாக்க முடியவில்லை. மொட்டுக் கட்சியிலிருந்து பிரிந்து போகாமல் இருந்த எஞ்சியோரையும், உதிரிகள் சிலரையும் சேர்த்து ஓர் அமைச்சரவையை ஸ்தாபித்திருக்கின்றார்.**

**அதுவும் கூட எத்தனை நாளைக்கு என்றுதான் கேள்வி எழுகின்றது.**

**மொட்டுக் கட்சியிலிருந்து அண்மையில் பிரிந்து வெளியேறி, சுயாதீனமாகச் செயற்படும் எந்த அணியும் அவரது புதிய அரசுக்குள் வரவில்லை.**

**இந்த அமைச்சரவை புதிய மொந்தையில் பழைய கள்ளு. அவ்வளவுதான். எந்தப் புதுத் தினுசும் இல்லை – பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர. அவர் கூட நாடாளுமன்றத்தில் ஒரேயொரு ஆசனம் கொண்ட கட்சியின் உறுப்பினர்தான். தனி சுயேச்சைக்கு ஒப்பானவர்தான்.**

**இந்த அரசும் கூட, தாக்குப் பிடிக்கும் என்று நம்புவது துர்லபம்தான். கோட்டாவின் அரசில் ஆள்கள் மாற்றம் என்பது மட்டும் மாறாமல் தொடரும். ஆனால் அவர் மட்டும் மாறவே மாட்டார். அது நமது தேசத்தின் தலைவிதி.**

## இந்திய ஏற்றுமதி - இறக்குமதி வங்கியின் ஒத்துழைப்பு பெற அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மே 25

பெற்றோலியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக, இந்திய ஏற்றுமதி – இறக்குமதி வங்கியின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அந்தவகையில், பெற்றோலியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக, இந்திய ஏற்றுமதி – இறக்குமதி வங்கியின் ஒத்துழைப்பின் கீழ் 50 கோடி அமெரிக்க டொலர் கடனைப் பெற்றுக்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொற்றோலிப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர முன்வைத்த யோசனைக்கே அமைச்சரவை இவ்வாறு அனுமதி வழங்கியுள்ளது.

## ஒரு வருட காலமாக திருட்டில் ஈடுபட்டு வந்த நபர் யாழில் கைது!



நகை, பணம் மீட்பு

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு வருட காலமாக 6 வீடுகளில் திருட்டில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் அரியாலை பூம்புகார் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபர் ஒருவரே யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்படி நபரைக் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த போது, கடந்த 2021 ஆம் ஆண்டு மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் 6 வீடுகளில் தான் தங்க நகைகள், பணம் என்பவற்றை திருடினேன் என தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒரு தொகை நகை மற்றும் பணம் என்பவற்றை மீட்டுள்ளோம் எனவும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகிறோம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## உரத்தைப் பதுக்கி மோசடி களஞ்சியசாலை சுற்றிவளைப்பு

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்த உரத்தை ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து இறக்குமதி செய்தாகக் குறிப்பிட்டு மோசடியில் ஈடுபட்ட வர்த்தகர் ஒருவரின் உரக்களஞ்சியசாலை நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகளால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

கல்முனை – சாய்ந்தமருது பிரதேசத்தில் இந்த மோசடி இடம்பெற்றுள்ளது. டிரக்டர் வாகனத்தின் உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் நபரொருவரே இவ்வாறு மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த நபர் பொரலஸ்கமுவ – பிரிவன சந்திக்கருகில் நாளொன்றுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வாடகைக்கு கட்டடமொன்றைப் பெற்று அதில் இவ்வாறு உரத்தைக் களஞ்சியப்படுத்தி மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்த உரத்தை , ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து இறக்குமதி செய்த உரத்தைப் போன்று காண்பிக்கும் வகையில் புதிய பைகளில் பொதியிட்டு இவர் மோசடி செய்துள்ளார்.

இது தொடர்பில் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமையவே நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையினர் குறித்த களஞ்சியசாலையை சுற்றி வளைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வடமராட்சி கொம்மாதுறையில்

## 'பூபாள ராகங்கள்' நிகழ்வின் 25ஆவது வருட நினைவு நாள்





வடமராட்சி கொம்மாதுறை கம்பர்மலை வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் 1997ஆம் ஆண்டு மே 22 ஆம் திகதி பாடசாலை மைதானத்தில் பெரிய எடுப்பில் நடத்திய 'பூபாள ராகங்கள்' நிகழ்ச்சியின் 25 ஆவது வருட நினைவு நிகழ்வுகள் வித்தியாலயத்தின் பழைய மாணவர்களினால் நடத்தப்பட்டன.

ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருந்த யுத்த காலகட்டத்தில் இந்த 'பூபாள ராகங்கள்' நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

மாலையில் நிகழ்வுக்காகப் பாடசாலைக்கு வந்தவர்கள் வெளியில் செல்லக் கூடாது என்ற இராணுவ கட்டுப்பாட்டுடன் கூடிய அனுமதியின் கீழ் முழு இரவு நேர நிகழ்வாக 'பூபாள ராகம்' அரங்கேறியது.

அதன் 25 ஆவது ஆண்டை நினைவு கூரும் முகமாக பாடசாலையுடன் கூடிய கொம்மாதுறை ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலயத்தில் கடந்த 22ஆம் திகதி சிறப்பு பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. 25 ஆண்டுகள் நிறைவையொட்டி பாடசாலை சுற்றாடலில் இருபத்தியைந்து மரக்கன்றுகள் நடப்பட்டன. பூபாள ராகம் அனுபவப் பகிர்வுடன் கூடிய நினைவுமீட்டல் நிகழ்வாக இது நடந்தேறியது. அன்றைய பூபாள ராகங்கள் விழாக்குழுவினர், பாடசாலை சமூகத்துடன் இணைந்து இந்த நினைவு நாளை உணர்வுபூர்வமாக அனுஷ்டித்தனர்.

# பொருளாதாரப் பின்னடைவு, உணவுப் பஞ்சம் இரண்டில் இருந்தும் நாடு மீள் எழுவது எப்படி?



டாக்டர்
முரளி
வல்லிபுரநாதன்




**வரப்புயர நீர் உயரும்**
**நீர் உயர நெல் உயரும்**
**நெல் உயரக் குடி உயரும்**
**குடி உயரக் கோல் உயரும்**
**கோல் உயரக் கோன் உயர்வான்**

கி.பி. 2 ஆம் நூற்றாண்டுப் புலவர் ஔவையார் பாடியது இது.

தக்காளிப்பழம் 700 ரூபாவாக அதிகரித்துள்ளது. ஏனைய சகல மரக்கறிகளின் விலைகளும் முன்னெப்போதும் இல்லாதவாறு மூன்று இலக்கத்துக்கு அதிகரித்துள்ளன. இந்த விலை அதிகரிப்புக்கும் நாடு தற்போது எதிர்நோக்கியிருக்கும் ஆபத்தான உணவுப் பஞ்சத்துக்கும் உரிய காரணங்களை ஆராய்ந்து இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பி நாடு தன்னிறைவு காண்பதற்கு நாம் ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டும் என்பதை ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

கோ கம வீட்டுக்கு செல்லுங்கள் என்ற கோஷத்துக்கு நான் எதிரானவன் அல்லன். தமது கடமையில் இருந்து தவறியவர்கள் - பெரும் ஊழலில் ஈடுபட்டு நாட்டை பொருளாதாரத்தை படு பாதாளத்துக்குள் தள்ளிய வர்கள் பதவியில் இருந்து அகற்றப்பட்டு உரிய முறையில் தண்டிக்கப்பட வேண்டும்.

ஆயினும் மரக்கறிகள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலை அதிகரிப்புக்கு காரணமானவர்கள் யார்? நிச்சயமாக இந்த நிலை ஏற்படுவதற்கு பசளைத் தட்டுப்பாடும் பீடைகொல்லி மருந்துகளையும் தடுத்து நிறுத்திய அரசாங்கமும்




அதன் தலைவர்களும் பொறுப்புக் கூற வேண்டும்.

ஆனால் அரசாங்கமும் ஆட்சியாளர்களும் மட்டுமா இந்த நிலை ஏற்பட்டதற்கு காரணம்? ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இருந்த எனது கிராமத்தின் அப்போதைய நிலையையும் இன்றைய நிலையையும் ஒப்பிட்டு பார்க்கிறேன்.

அதிகாலையில் எழுந்து துலா மிதித்து, சூரிய உதயத்துக்கு முன்னரே தோட்டங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி, கடின உழைப்பினால் வரப்புயர வாழ்ந்த சுறுசுறுப்பான ஆண்கள். வீடுகளில் சமைக்கும் நேரம் போக ஏனைய நேரங்களில் பனையோலைக் கைத்தொழில், ஆடு, மாடு, கோழி வளர்ப்பு என்று வருமானத்தை பெருக்கி சுறுசுறுப்பான பெண்களுடன் உணவில் தன்னிறைவு கண்ட குடும்பங்கள்.

## இன்றைய நிலை என்ன?

வெளிநாட்டு வருமானத்தில் தங்கியிருக்கும் சோம்பேறிக் குடும்பங்கள். குடித்தொகை அதிகரித்தாலும் பெரும்பாலான நிலங்கள் தரிசு நிலங்களாக பயிரிடாமல் இருக்கின்றன. பெண்கள் சமைக்காமல் வாங்கிச் சாப்பிடும் குடும்பங்களுடன், வருவாயைப் பெருக்கும் தொழில்களில் ஈடுபடாமல், தொலைக் காட்சி நாடகங்களை பார்த்துக் கொண்டு இருக்கின்றனர். மீதி நேரத்துக்கு தொலைபேசியிலும் சமூக வலைத்தளங்களிலும் அரட்டை அடித்துக் கொண்டு பெருமளவு பணத்தை இந்த வசதிகளுக்கு வாரி இறைத்துக் கொண்டிருக்கின்றனர்.

உள்நாட்டு யுத்த காலத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார உணவுத் தடைகளுக்கு எதிராக தமிழ் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு இருந்தது. வீட்டுத்தோட்டங்களும் மரவள்ளி முதலான பயிர்ச்செய்கையும் ஊக்கப்படுத்தப்பட்டு இருந்தன. அதன் காரணமாக அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட தற்போதைய நிலையை விட மோசமான உணவு, எரிபொருள், மருந்துத் தடைகளையும் வெற்றிகரமாக அப்போதைய தமிழ் மக்கள் எதிர்கொண்டார்கள். முழுமையான மின்சாரத் தடைக் காலத்தில் எனது சக மாணவர்கள் வைத்தியசாலைக்கு முன்னால் இருந்த தெருவோர மின்விளக்குகளில் படித்து பிற்காலத்தில் மருத்துவ நிபுணர்கள் ஆனார்கள். ஆனால், இன்றைய தலைமுறை வெளிநாட்டு வருமானத்தில் சொகுசாக வாழ்ந்து பழக்கப்பட்டு விட்டார்கள். வரப்புயர என்று விவசாயத்திலும் ஏனைய சிறு தொழில்களில் ஈடுபடுவதும் கௌரவக் குறைவாக உள்ளது.



இவ்வாறு ஒவ்வொரு குடும்பமும் எளிதாக வீட்டுத் தோட்டங்களில் பயிரிடக்கூடிய தக்காளி போன்ற மரக்கறிகளை மறந்து போய்விட்டதால் அவற்றின் விலை அதிகரித்து இருக்கிறது என்பதை கோ கம போராட்டக்காரர்களுடன் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் வரப்புயர உணவில் தன்னிறைவு காணும் எண்ணமும் முயற்சியும் வரவேண்டும். அவ்வாறான மாற்றம் வீடுகள் தோறும் ஏற்படும் போது மாத்திரமே ஔவையார் கூறிய நாடு தன்னிறைவு காணும் நிலை ஏற்படும்.

மறுபுறம் வரலாற்றில் இருந்து ஆட்சியாளர்களும் அரசாங்கமும் கற்க வேண்டிய பாடங்கள் நிறையவே உள்ளன.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஜப்பான் தற்போதைய இலங்கையை விட மோசமான பணவீக்கத்தினாலும் சரிவடைந்த பொருளாதாரத்தினாலும் பாதிக்கப்பட்டு இருந்தது. ஆனால் வெகுவிரைவிலேயே அது அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளை விட விரைவாக பொருளாதாரத்தில் முன்னேறியது. (படம் இணைக்கப்பட்டுள்ளது).

ஜப்பான் விரைவாக முன்னேறியதற்கு பொருளாதார ஆய்வாளர்கள் இரண்டு முக்கிய காரணங்களை தெரிவிக்கின்றனர்.

1. போருக்காக பயன்படுத்திய வளங்களை அதை நிறுத்திவிட்டு நாட்டின் அபிவிருத்திக்காக திசை திருப்பினார்கள்.

2. அமெரிக்க நிதிஉதவி உட்பட வெளிநாட்டு உதவிகளில் தங்கி இருக்காமல் உள்ளூர் வளங்களின் மூலமாக நாட்டை மேம்படுத்தினார்கள்.

ஆனால் இலங்கையை எடுத்து நோக்கினால் இதற்கு நேர்மாறான கொள்கைகளை வகுத்து செயல்பட்டிருந்தார்கள்.

1. 2009 போர் முடிவடைந்த பின்னரும் தொடர்ச்சியாக ஆயுதப்படைகளுக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்தார்கள்.

2. உள்நாட்டு உற்பத்திகளை பெருக்காமல் வெளிநாட்டு கடன்களை அதிகமாக வாங்கினார்கள்.

தற்போதைய ஜனாதிபதியும் பிரதமரும் இன்னமும் இந்த இரண்டு தவறுகளையும் நிவர்த்திக்காமல் மேலும் வெளிநாட்டுக் கடன்களை வாங்குவதற்குரிய உபாயங்களை தேடி வருகிறார்கள். இந்த நிலையில் கோ கம போராட்டக்காரர்களின் ஆட்சி மாற்றத்துக்கான கோரிக்கையே நாட்டை முன்னேற்றுவதற்குரிய ஒரே வழியாக உள்ளது.



# ராஜபக்ஷர்களின் அரசியல் நியமனங்கள் உடன் இரத்துச் செய்யப்படல் வேண்டும்!

## சம்பிக்க வலியுறுத்தல்



அரசமைப்பின் 21ஆவது திருத்த சட்டமூலம் எதிர் வரும் மாதம் கூடவுள்ள முதலாவது நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் போது சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

முக்கிய அரச நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்கு ராஜபக்ஷர்களால் வழங்கப்பட்டுள்ள அரசியல் நியமனம் ரத்து செய்யப்பட்டு மத்திய வங்கியின் ஆளுநரைப் போன்று தகைமையுள்ளவர்கள் உரிய பதவிகளுக்கு நியமிக்கப்பட வேண்டும் என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளோம்.

பொருளாதார நெருக்கடிக்கு அரசியல்வாதிகள் மாத்திரமல்ல ஒருசில அரச நியமனங்களும் பொறுப்புக் கூற வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட அரசமுறை கடன்களை மீள செலுத்த முடியாது அல்லது கடன் மறுசீரமைக்கப்படும் என்பதை அறிவித்ததைத் தொடர்ந்து நாடு வங்குரோத்து நிலைமையை அடைந்துள்ளது என்பதை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளோம். பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியாகத் தீவிரமடைந்துள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தால் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்ததைத் தொடர்ந்து பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மை அரசாங்கம் முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும், ராஜபக்ஷ குடும்பம் அரசியலில் இருந்து முழுமையாக ஓய்வுபெற வேண்டும் என்பது மக் களின் பிரதான போராட்ட கோஷமாக உள்ளது. நாட்டில் தற்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ள அரசாங்கம் எத்தன்மையான கட்டமைப்பைக் கொண்டுள்ளது என்பது தொடர்பாக சர்வதேசம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது. பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் தவறான நிர்வாகத்தால் நாட்டு மக்கள் முழுமையாக அரச கட்டமைப்பை எதிர்க்கிறார்கள். பொதுத்தேர்தல் ஒன்று இடம்பெறும் வரை நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து இடைக்கால அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்குமாறு தொடர்ந்து வலியுறுத்தினோம்.

பல்வேறு காரணிகளால் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்கும் முயற்சி தடைப்பட்டதைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவோம்.

மக்களின் போராட்டம் நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ள பின்னணியில் அரசாங்கம் கொள்கை ரீதியிலான தீர்மானங்களை முன்னெடுக்க சகல நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள வேண்டும். அமைச்சரவையின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு சகல கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் விசேட கண்காணிப்பு குழு ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஷ குடும்பம் மாத்திரமல்ல ராஜபக்ஷர்களால் வழங்கப்பட்ட அரசியல் நியமனங்களும் பொறுப்புக் கூற வேண்டும். ராஜபக்ஷர்கள் தாம் ஆட்சிக்கு வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களை மகிழ்விக்கும் வகையில் மேற்படி துறைக்கு பொருத்தமற்றவர்களை முக்கிய அரச நிறுவனங்களின் தலைவர்களாக நியமித்தார்கள். ராஜபக்ஷர்களின் அரசியல் நியமனம் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கும்,சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள அடிப்படை மூல காரணியாக அமைந்துள்ளது.

ஆகவே, அரசியல் நியமனங்கள் அனைத்தையும் ரத்து செய்து மத்திய வங்கியின் ஆளுநரைப் போன்று மக்களால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட வேண்டும் என்பதை பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளோம். அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் நீக்கம், 21 ஆவது திருத்தம் உருவாக்கம் தொடர்பில் நாட்டு மக்கள் அதிக அவதானம் செலுத்தியுள்ளார்கள். 21 ஆவது திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் மாதம் கூடவுள்ள முதலாவது நாடாளுமன்ற கூட்டத்தொடரின் போது சமர்ப்பிக்கப்பட்டு, விரைவாக நிறைவேற்றிக்கொள்ளப்பட வேண்டும். மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் – என்றார்.

# வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாவிடின் இந்த அரசும் 3 மாதங்களுக்கு மேல் நீடிக்காது

## அமைச்சர் ஹரின் ஆரூடம்

ஜனாதிபதி தோல்வி என்பதற்காக நாட்டை தோற்கடிக்க முடியாது. அரசமைப்பு திருத்தம் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாவின் இந்த அரசாங்கமும் மூன்று மாத காலத்துக்கு மேல் நீடிக்காது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கு அமைய எதிர்வரும் நாள்களில் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என சுற்றுலா மற்றும் காணி விவகாரத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். சுற்றுலா மற்றும் காணி விவகாரத்துறை அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாடு மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள வேளையில் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பொதுக்கொள்கைக்கமைய ஒரு தீர்மானத்தை முன்னெடுக்கவில்லை. அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண நாடாளுமன்ற மட்டத்தில் முறையான தீர்வு எட்டப்படவில்லை. நாட்டு மக்களின் நிலைமையைக் கருத்திற்கொண்டு அரசியல் கொள்கையை புறக்கணித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் ஒன்றிணைந்துள்ளேன்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது வெறுப்பு காணப்படுகிறது. ஜனாதிபதி பதவி மீது மதிப்பளித்து அவரிடமிருந்து அமைச்சு பதவியை ஏற்றுக்கொண்டேன்.

ஜனாதிபதியைக் கடுமையாக விமர்சித்து விட்டு எவ்வாறு அவரின் முகத்தைப் பார்த்துக் கொண்டு, அவரிடமிருந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் ஒருசில உறுப்பினர்கள் விமர்சிக்கிறார்கள். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ இறுதி தருணத்தில் பிரதமர் பதவியை ஏற்பதற்கு இணக்கம் தெரிவித்தார்.

பிரதமர் பதவியை ஏற்கும் எதிர்க்கட்சி தலைவரது தீர்மானத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டிருந்தால் அவரும் ஜனாதிபதியின் முகத்தைப் பார்த்து, ஜனாதிபதியிடமிருந்து தான் பிரதமர் பதவிக்கான நியமனத்தைப் பெற்றிருக்க வேண்டும். ஆகவே பொருத்தமற்ற தர்க்கத்தை முன்வைப்பதை அரசியல்வாதிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தில் அமைச்சு பதவியை பொறுப்பேற்றது மனசாட்சிக்கு விரோதமானது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். சேர் பெய்ல் (ஜனாதிபதி தோல்வி) என்பதை தற்போதும் குறிப்பிடுகிறேன். ஜனாதிபதி தோல்வி என்பதற்காக நாடு தோல்விய டைய இடமளிக்க முடியாது.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் நீக்கம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கம், 21 ஆவது திருத்தம் நிறைவேற்றம் ஆகிய முக்கிய விடயங்களை அரசாங்கம் செயற்படுத்தாவிடின் இந்த அரசாங்கமும் 3 மாத காலம் வரை நீடிக்காது. அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படாவிடின் ஒரு நொடிப் பொழுது கூட அமைச்சு பதவி வகிக்கமாட்டேன். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளித்து 21ஆவது திருத்தத்துக்கு முழுமையாக ஆதரவு வழங்க வேண்டும்.– என்றார்.

# அவசரமாக 21 ஆவது திருத்தம் கொண்டு வருவது பாரிய தவறு!

## தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம் ஜனாதிபதிக்குக் கடிதம்

நாட்டில் தற்போது நிலவிவரும் அமைதியற்ற சூழ்நிலையில் மக்களின் கருத்தை அறிந்து கொள்ளாது 21 ஆவது அரசமைப்பு திருத்தம் நாடாளுமன்றில் உடனடியாக கொண்டு வரப்படவுள்ளமை பாரிய தவறாகும் என தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 21 ஆவது மற்றும் 22 ஆவது அரசமைப்பு திருத்தங்களை இரு வேறு பிரிவினர்களால் கொண்டுவரப்பட்டுள்ள சட்ட மூலங்களை வர்த்தமானியில் உள்ளடக்கி நாடாளுமன்றின் ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதன்படி அமைச்சரவையின் அனுமதியை பெற்றுக்கொண்டு இந்த இரண்டு சட்ட மூலங்களின் ஏதேனும் ஒன்றை நாடாளுமன்றில் விவாதத்துக்கு கொண்டு வர முடியும். அத்துடன், இந்த இரண்டு சட்ட மூலங்கள் அல்லாத புதிய சட்ட மூலம் ஒன்றை அரசாங்கத்தால் கொண்டு வர முடியும்.

ஆகவே, இந்த தெளிவற்ற தன்மை காரணமாக குறித்த சட்ட மூலங்களானவை நீதிமன்ற சவாலுக்கு உட்படுத்தப்படவில்லை எனில், மக்கள் ஆணை இல்லாமல் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு முடியும். இது பாரிய ஜனநாயக அச்சுறுத்தலாக அமையும்.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டமையே அரசியல் நெருக்கடி ஏற்படுவதற்குப் பிரதான காரணமாகும். ஆகவே, பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணாமல் அரசியல் நெருக்கடியைத் தீர்க்க முடியாது. நாட்டில் இந்த இரண்டு நெருக்கடிகளை தீர்ப்பதற்கு எமது அமைப்பால் ஆறு யோசனைகளை முன்வைத்துள்ளோம்.

அவை கீழே தரப்படுகின்றன.

1.நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை தீர்த்து ஒழுக்கமான அரசியல் கலாசாரமொன்று அமையும் வரையில், அரசமைப்பு திருத்தம் தொடர்பான நடவடிக்கைகளை தாமதப்படுத்தல்.

2. மேலே கூறப்பட்ட காலம் அமையும் வரையில், அரசமைப்பு திருத்தம் நடைபெறும் போது, வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் தற்போது கொண்டுவரப்பட்டுள்ள தனிநபர் சட்ட மூலங்களை நாடாளுமன்ற செயற்குழுவின் ஊடாக திருத்தம் செய்வதை விடுத்து, அரசாங்கத்தால் புதியதொரு சட்டமூலத்தை வர்த்தமானியில் உள்ளடக்கி நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் இடம்பெற செய்ய வேண்டும். எனினும், அதற்கு முன்னதாக மக்கள் கருத்தைப் பெறுவதற்கான குறிப்பிடத்தக்க கால அளவு வழங்கப்பட வேண்டும்.

3. வர்த்தமானியில் இடம்பெறும் சட்ட மூலத்தில் உள்ளடங்குகின்ற திருத்தங்கள் மற்றும் நீதிமன்றத்தால் இணக்கம் தெரிவிக்கப்பட்ட திருத்தங்கள் தவிர்ந்த வேறேந்தவொரு திருத்தங்களும் நாடாளுமன்ற செயற்குழு கூட்டத்தின்போது உள்ளடக்கப்பட மாட்டாது என்பது தொடர்பான உறுதி சகல பிரிவினராலும் வழங்கப்பட வேண்டும்.

4.நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில், அரசமைப்பு திருத்தங்களின்போது பல்வேறு தந்திரங்களை பயன்படுத்துவதற்குப் பதிலாக இரண்டாம் தர அரசியலமைப்பு திருத்தமொன்றை மக்கள் ஆணைக்கு முன்வைக்கப்படும் என்பதை குறித்த சட்ட மூலம் மீதான முதலாம் வாசிப்பின்போது நாடாளுமன்றத்துக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

5. ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கிடையில் அதிகாரம் தொடர்பில் ஏதேனுமொரு குளறுபடிகளை தோற்றுவிப்பதன் ஊடாக அரசாங்கத்தை வலுவிலக்கச் செய்ய இடமளிக்கக் கூடாது. அவ்வாறு ஜனாதிபதி அல்லது பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையின் நிறைவேற்று அதிகாரங்கள் குறைக்கப்படும் திருத்தங்கள் கொண்டு வரப்படும் சந்தர்ப்பத்தின்போது, கட்டாயமாக 13 ஆவது அரசமைப்பு திருத்தம் ஊடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அரசமைப்பு ரீதியான அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும்.

6. ஜனாதிபதித் தேர்தலின்போது உங்களுக்கு கிடைத்த மக்கள் ஆணையின்படி, நீங்கள் புதிய அரசமைப்பு உருவாக்கம் ஒன்றைச் செய்ய வேண்டுமே தவிர, அரசமைப்பு திருத்தத்தை அல்ல. இதன்படி, பல்வேறு பிரிவினர்களின் மறைமுகத் தேவைகளுக்கு அமைவாக முன்வைக்கப்படும் அரசமைப்பு திருத்தங்களை ஏற்றுக்கொள்ளாது, அதற்குப் பதிலாக புதிய அரசமைப்பொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். – என்றுள்ளது.

# சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு; மத்திய வங்கி ஆளுநர் தெளிவுபடுத்தல்





இந்தியாவிடமிருந்து அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதேபோன்று உலகவங்கியின் நிதியுதவியில் ஒருபகுதி மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

அதன்படி எதிர்வரும் வாரமளவில் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப்பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக நீண்ட வரிசைகளில் காத்திருக்கவேண்டிய நிலை ஒப்பீட்டளவில் குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கிறேன் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் உள்ளடங்கலாக ப்ரஸ் கிளப்பினால் 'நாட்டின் பொருளாதார நிலையும் சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சுகளும்' என்ற தலைப்பில் கொழும்பிலுள்ள ஹில்டன் ஹோட்டலில் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் பங்கேற்று நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைவரம், சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட நிதிவழங்கல் கட்டமைப்புக்களுடனான பேச்சுகள், அத்தியாவசியப்பொருள்களுக்கான தட்டுப்பாட்டுக்குத் தீர்வுகாண்பதற்குரிய முயற்சிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

தற்போது எமது நாடு மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றது. குறிப்பாக அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்தல் உள்ளடங்கலாக நாட்டின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அவசியமான வெளிநாட்டு நாணயத்துக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது.

நான் மத்திய வங்கியின் ஆளுநராகப் பதவியேற்றவுடன் வெளிநாட்டுக் கையிருப்பு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதை அறிந்துகொண்டேன். அதன் காரணமாகக் கடன்களை மீளச்செலுத்தமுடியாத முறிவடைந்த நிலையேற்படுவதைத் தடுப்பதற்காகக் கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி வெளிநாட்டுக்கடன் மீள்செலுத்துகையை இடைநிறுத்துவதற்கான அறிவிப்பை வெளியிட்டோம்.

அதன்மூலம் எமது நிலையை வெளிநாட்டுக்கடன் வழங்குநர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்கும், கடன் மீள்செலுத்துகை தொடர்பில் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், கடன் மறுசீரமைப்பைமுன்னெடுப்பதற்கும் எதிர்பார்க்கின்றோம்.

அதேவேளை சர்வதேச நாணயத்துடனான தொழில்நுட்பமட்ட கலந்துரையாடல்கள் முடிவிற்குக்கொண்டு வரப்படவுள்ள நிலையில், அடுத்தகட்டப் பேச்சுகளுக்குத் தயாராகின்றோம்.

3, 4 மாதங்களுக்கு முன்னர் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுகளை ஆரம்பித்திருந்தால் 3 மாத காலத்துக்குள் உதவிகளைப் பெற்றுக்கொண்டிருக்க முடியும்.

ஆனால் வெளிநாட்டுக்கையிருப்பு வெகுவாக வீழ்ச்சிகண்டதன் பின்னர் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டமையால், சர்வதேச நாணய நிதியம் அத்தகைய நாட்டுக்கு நிதியுதவிகளை வழங்க முன்வராது.

எனவே இப்பேச்சுகளைத் தொடர்ந்து அவசியமான உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு சுமார் 4 – 6 மாத காலமாகும்.

இது இவ்வாறிருக்க உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஆகிய கட்டமைப்புக்களிடமிருந்து நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் பாரிஸ் கிளப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் மற்றும் இந்தியா, சீனா போன்ற பாரிஸ் கிளப்பில் அங்கம் வகிக்காத நாடுகள் ஆகியவற்றுடனும் பேச்சுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அடுத்ததாக இந்தியாவிடமிருந்து அத்தியாவசிய மருந்துப்பொருள்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதேபோன்று உலகவங்கியின் நிதியுதவியில் ஒருபகுதி மருந்துப்பொருள்களைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

அதன்படி எதிர்வரும் வாரமளவில் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப்பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக நீண்ட வரிசைகளில் காத்திருக்கவேண்டிய நிலை ஒப்பீட்டளவில் குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். – என்றார்.

## வாகன எரிபொருள் வழங்கல் கட்டண வரையறையில் மாற்றம்

வாகனங்களுக்கு எரிபொருளை வழங்கும் கட்டண வரையறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எரிபொருள் நிலையங்களில் வாகனங்களுக்கு எரிபொருளை வழங்கும் அதிகபட்ச கட்டண அளவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பையடுத்து இம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை முதல் அமுலாகும் வகையில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் காஞ்சன இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, மோட்டார் சைக்கிள்களுக்கு ஆகக்கூடுதலாக 2,500 ரூபாவுக்கு எரிபொருளை நிரப்ப முடியும்.

ஓட்டோக்களுக்கு ஆகக்கூடுதலாக 3 ஆயிரம் ரூபாவுக்கு எரிபொருளை நிரப்ப முடியும். கார் உள்ளிட்ட சிறிய ரக வாகனங்களுக்கு ஆகக்கூடுதலாக 10 ஆயிரம் ரூபாவுக்கு எரிபொருளை நிரப்ப முடியும் என வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

## கொழும்பு விஹாரமஹாதேவி பூங்காவில் இராணுவ கொவிட் தடுப்பூசி நிலையம் திறப்பு

கொவிட்–19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக கொழும்பு விஹாரமஹாதேவிபூங்காவில் இலங்கை இராணுவத்தினால் முன்னெடுக்கப்பட்டு வந்த தடுப்பூசி ஏற்றும் நிலையம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புப்படைகளின் பிரதானி மற்றும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவின் பணிப்புரைக்கு அமைய இந்த தடுப்பூசி ஏற்றும் நிலையம் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவம் குறிப்பிட்டுள்ளது. இந்த நிலையம் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் தினமும் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை திறந்திருக்கும் எனவும் கொவிட் 19 தொற்றைக் கட்டுப்படுத்தும் எந்தவித மான தடுப்பூசியையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

# மே 9 வன்முறைகள் தொடர்பான விசாரணைகளில் பக்கச்சார்பற்ற தன்மையை கடைப்பிடிக்கவேண்டும்

## ஜே.பி.வி. பொலிஸ்மா அதிபரிடம் வலியுறுத்தல்

நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்றவன்முறைகள்தொடர்பில்கைதுசெய்யப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலானோருக்கு மக்கள் விடுதலை முன்னணியுடன் எவ்வித தொடர்பும் கிடையாது.

ஜே.வி.பி. ஆதரவாளர்கள் மீது அரசியல் பழிவாங்கலை முன்னெடுப்பதற்கு சிலர் முயற்சிப்பதால் இது தொடர்பான விசாரணைகளில் பக்கச்சார்பற்ற தன்மையைப் பேணுமாறு பொலிஸ்மா அதிபரிடம் வலியுறுத்தியுள்ளேன் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபருடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அலரி மாளிகை மற்றும் காலி முகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த பயங்கரவாதிகளே இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டனர். அதன் பின்னர் அன்றைய தினம் நாடளாவிய ரீதியில் வன்முறைகள் பரவலடைந்தன. இவற்றின் பின்னணியில் ஜே.வி.பி. காணப்படுவதாக சாட்சியற்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

எனவே இவை தொடர்பில் ஜே.வி.பி. அங்கத்தவர்கள் எவரும் கைது செய்யப்பட்டுள்ளனரா? அல்லது வேறு கட்சி உறுப்பினர்கள் எவரும் கைது செய்யப்பட்டுள்ளனரா? என்பது தொடர்பில் பொலிஸ்மா அதிபரிடம் கேட்டறிய வேண்டிய தேவை ஏற்பட்டது.

பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளிடமிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கமைய தற்போது கைது செய்யப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலானவர்களுக்கும் ஜே.வி.பிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. அவர்கள் ஏனைய கட்சிகளுடன் தொடர்புடையவர்களாவர்.

எனினும் கடந்த வாரங்களில் நாடாளுமன்றத்தில் பலராலும் ஜே.வி.பி. மீது குற்றஞ்சுமத்தப்பட்டது. அவர்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவையாகும்.

பொலிஸ்மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கமைய இதனை எம்மால் உறுதிப்படுத்திக்கொள்ள முடிந்தது.

அத்தோடு வன்முறைகளுடன் தொடர்புடையவர்கள் அரசியல் கட்சி பேதமின்றி கைது செய்யப்படுகின்றனர் எனவும் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

தனிப்பட்ட பழிவாங்கல் மற்றும் அரசியல் பழிவாங்கும் நோக்கில் எமது கட்சி உறுப்பினர்களை வேட்டையாடும் நோக்கில் சில விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என இதன்போது சுட்டிக்காட்டினோம்.

அதையும் பரிசீலிக்க அவர்கள் ஒப்புக்கொண்டனர். பொலிஸாரின் பாரபட்சமற்ற தன்மையைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினோம்.

இது தொடர்பான விசாரணைகள் பாரபட்சமின்றி மேற்கொள்ளப்படும் என பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட ஏனைய பொலிஸ் அதிகாரிகளும் உறுதியளித்தனர். – என்றார்.

# நெருக்கடி காலங்களில் வழிகாட்டுவதற்கு தமிழர்களுக்கு இப்போது தலைமை இல்லை

## பசுமை அறிவொளி நிகழ்ச்சியில் ஐங்கரநேசன் தெரிவிப்பு



இலங்கை முன்னெப்போதும் சந்தித்திராத பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவித்துக் கொண்டிருக்கிறது. சிங்கள மக்களைப் போன்றே தமிழ் மக்களும் பெரும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், யுத்த காலத்தில் பாரிய நெருக்கடிகளுக்குப் பழக்கப்பட்டு விட்டோம் என்ற மனோநிலையில் இருக்கும் தமிழ்மக்கள் இந்தப் பிரச்சினைகளை அவற்றின் பாரதூரம் புரியாமல் இலகுவாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

யுத்த காலத்தில் தமிழ் மக்களை வழிப்படுத்த விடுதலைப்புலிகள் இருந்தார்கள். ஆனால், நெருக்கடி காலங்களில் வழிகாட்டுவதற்குத் தமிழர்களுக்கு இப்போது ஒரு தலைமை இல்லை. இப்போதைய நெருக்கடிச் சூழலை நாம் சரியான முறையில் கூட்டாக எதிர்கொள்ளத் தவறினால் தமிழினம் பாரிய எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டம் கடந்த திங்கட்கிழமை நாவற்குழியில் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்த பெற்றோர்களினதும் மாணவர்களினதும் மத்தியில் உரையாற்றும்போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

தமிழ் மக்களின் பெரும் மூலதனம் கல்வி ஒன்றுதான். இதனாலேயே யுத்த நெருக்கடிகளின் மத்தியிலும் விடுதலைப்புலிகள் கல்விக்கென்று தனியானதொரு பிரிவை உருவாக்கி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கூடிய சிரத்தை எடுத்திருந்தார்கள். இடப்பெயர்வுகளின் மத்தியில் குப்பி விளக்குகளில் படித்தும்கூட மாணவர்களால் சிறந்த பெறுபேறுகளை எட்டக்கூடியதாக இருந்தது. ஆனால், இப்போது தமிழ்மக்கள் தொடர்ந்து கல்வியில் வீழ்ச்சியையே சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள்.

விடுதலைப்புலிகள் காலத்தில் இருந்த இறுக்கமான கட்டுப்பாடுகள் இப்போது இல்லாத நிலையில் வன்முறைகளுக்கும் போதைப் பொருள் பாவனைக்கும் மாணவர்கள் திட்டமிட்டுப் பழக்கப்படுகிறார்கள். இந்தத் திசைதிருப்புதல்களுக்கும் மேலாக, கொரோனாப் பெருங்கொள்ளை நோயால் பல மாதங்களாகப் பாடசாலைகள் மூடப்பட்டதாலும் மாணவர்கள் கல்வியில் பெரும் பின்னடைவைச் சந்தித்தார்கள். இவற்றுடன் இப்போது நாட்டின் பொருளாதார சீர்குலைவும் கல்வியைப் பாதித்துக் கொண்டிருக்கிறது.

போரின் பாதிப்புகளில் இருந்து மீண்டெழ முடியாமல் இருக்கும் தமிழ் மக்களைப் பொருள்களின் உச்ச விலையேற்றம் கடுமையாகப் பாதிக்கத் தொடங்கியுள்ளது. வறுமை கல்வியை மோசமாகப் பாதிக்கும். ஏழைக் குடும்பங்கள் மாணவர்களை வேலைக்கு அனுப்புகின்ற சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எந்தக் கடுமையான சூழ்நிலையிலும் எதற்காகவேனும் பிள்ளைகளின் கல்வியை நாம் பலியிட்டு விடக்கூடாது. இந்த விடயத்தில் தமிழ்த்தேசியம் பேசிக் கொண்டிருக்கும் அனைவரும் உடனடியாகக் கரிசனை கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டம்



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சித்திட்டம் கடந்த திங்கட்கிழமை நாவற்குழியில் இடம்பெற்றது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பின்தங்கிய கிராமங்களில் மாணவர்களிடையே சூழல் அறிவைப் புகட்டி சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும், அவர்களின் கல்வி வளர்ச்சி மற்றும் ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் நோக்கோடும் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இதன் ஒரு கட்டமாகவே நாவற்குழி ஐயனார் கோவிலடியில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் பங்கேற்ற இந்த நிகழ்ச்சியில் அப்பகுதியைச் சேர்ந்த மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். மாணவர்கள் அனைவருக்கும் சூழல் விழிப்புணர்வு வாசகங்கள் அச்சிட்ட மாணவர் குறிப்பேடுகள் வழங்கப்பட்டன. இந்தக் குறிப்பேடுகளுக்கான அனுசரணையைக் கனடா ரொறன்ரோவின் மனித நேயக்குரல் அமைப்பு வழங்கியிருந்தது.

# காரைநகர் – ஊர்காவற்றுறை படகுச்சேவை எரிபொருள் இன்மையினால் தடைப்பட்டது!

## யாழ். அரச அதிபர் கவனம் செலுத்துவாரா?

*யாழ்ப்பாணம், மே 25*

*காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையே பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பாதைப் படகு கடந்த ஒரு வாரகாலமாக சேவையில் ஈடுபடுத்தப் படாமையால் அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.*

*மண்ணெண்ணெய் இன்மையாலேயே மேற்படி சேவை இடம்பெறவில்லை என வீதி அபிவிருத்தி அதிகார சபை பணியாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்தப் பாதைச் சேவையை நடத்துவதில் வீதி அபிவிருத்தி அதிகார சபை தொடர்ந்தும் அசமந்தப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது என இதனூடாக பயணிப்போர் குற்றம் சாட்டுகின்றனர்.*

*பொறுப்புடைய ஓர் அரச நிறுவனம் மண்ணெண்ணெயை தேவைக்கேற்ப பெற்று வைத்திருந்து மக்களுக்கு சீரான சேவையை வழங்கவேண்டும். அதை விடுத்து, கடல் கடந்து போக்குவரத்துச் செய்யும் அரச பணியாளர்களை சிரமத்திற்கு உள்ளாக்குகின்றமை தொடர்பாக அரச பணியாளர்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.*

*பாதைச் சேவை இடம்பெறாமையால் தனியார் படகுகளில் மோட்டார் சைக்கிள்களை ஏற்றும்போது அவை சேதமடைகின்றன எனவும் உதிரிப்பாகங்களை அதிக விலைக்கு பெற்று சீர்செய்தாலும் அவை மீண்டும் சேதமடைகின்றன எனவும் கவலை வெளியிடுகின்றனர்.*

*இந்த விடயத்தில் யாழ். அரசாங்க அதிபர் கவனம் எடுத்து பாதைச் சேவை இடம்பெறுவதை உறுதிப்படுத்துமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

# கதிர்காம பாத யாத்திரை யாழில் ஜூன் 4 ஆரம்பம்





(காரைதீவு நிருபர் சகா)

யாழ்ப்பாணம் கதிர்காம பாத யாத்திரை எதிர்வரும் ஜூன் 4 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

கதிர்காமம் ஆடிவேல் திருவிழாவை முன்னிட்டு , தொண்டமானாறு செல்வச்சந்நியிலிருந்து கதிர்காமம் நோக்கிய பாத யாத்திரை வருடாவருடம் இடம்பெற்று வந்தது.

எனினும், கடந்த இரு ஆண்டுகளாக கொரோனா தாக்கம் காரணமாக பாதயாத்திரை இடம்பெறவில்லை.

தற்போது காலம் ஓரளவு கனிந்துள்ளது.

எனவே, இந்த வருடம் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கதிர்காமம் நோக்கி பாதயாத்திரையில் பயணிக்கவுள்ளனர். அவர்கள் குழுவாகவும் தனியாகவும் பயணிப்பது வழக்கம்.

பிரதான பாதயாத்திரை குழுவான வேல்சாமி தலைமையிலான குழுவினர் எதிர்வரும் 04.06.2022 காலை 8 மணிக்கு தொண்டமானாறு செல்வச்சந்நிதியிலிருந்து புறப்படவுள்ளனர்.

இதேவேளை, கதிர்காம கந்தனின் ஆடி மகா உற்சவம் ஆடி மாதம் 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆவணி மாதம் 11ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் இனிதே நிறைவடையவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# நாட்டின் இன்றைய நிலைமைக்கு அரசியல் தோல்வியே காரணம்

## வேலுகுமார் தெரிவிப்பு

நாட்டின் இன்றைய நிலைமைக்கு, கட்சியை முன்னிலைப்படுத்திய அரசியலின் தோல்வியே காரணமாகும் என கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

எமது நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து முன்னெடுக்கப்பட்ட அரசியல் செயற்பாடுகளின் தோல்வி இன்று முழுமொத்தமாக வெளிப்படுகின்றது. இலங்கையின் அரசியலில் பெரும்பான்மை சார்ந்த தேசிய கட்சிகள் பிரதான இடம் வகித்து வந்துள்ளன. அதேபோன்று, இனங்கள் சார்ந்தனவாகவும், பிராந்தியங்கள் சார்ந்தனவாகவும், சிறுபான்மை கட்சிகள் உருவாகி இருக்கின்றன. அதற்கு மேலதிகமாக பல சிறு கட்சிகளின் செயற்பாடுக ளும் இருக்கின்றன. இன்றைய நாட்டின் நிலைமைக்கு, கட்சியை முன்னிலைப்படுத்திய அரசியலின் தோல்வியே காரணமாகும்.

நாட்டுக்கென தேசிய கொள்கைத் திட்டம் ஒன்றை வகுத்து, அதற்கமைய தூர நோக்குடன் எச்செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. நாட்டுக்கென தேசிய கொள்கை ஒன்று இருக்கின்றதா? எனக் கேட்டால், இல்லை என்பதே உண்மையாகும்.

மாறாக அரசியல் கட்சிகள் தமக்கென கொள்கைகளை வகுத்துக்கொண்டு, அவற்றையே முன்னிலைப்படுத்தி செயற்பட்டன. காலத்துக்குக் காலம் ஆட்சி மாற்றம் இடம்பெறுகின்றபோது, கொள்கையும், செயற்பாடுகளும் மாற்றமடைந்தன.

அது மட்டுமல்லாது, ஆட்சியமைப்பதற்காக கூட்டுச் சேரும் கட்சிகளின் நிபந்தனைகளுக்கு ஏற்பவும், விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவும், கொள்கைகள், செயற்பாடுகள் மாற்றம் அடைந்தன. இவையனைத்தும்



எமது நாட்டுக்கென நிலையான ஒரு கொள்கை வேலைத்திட்டம் இருக்கவில்லை என்பதையே மீண்டும் காட்டுகின்றது.

கட்சிகளைப் பிரதிநித்துவப்படுத்தி தெரிவாகும் உறுப்பினர்களுக்கு, நாட்டையும் மக்களையும் முன்னிலைப்படுத்தி செயற்படுவதற்குரிய இடமளிக்கப்படவில்லை. மாறாக கட்சிக் கொள்கைக்கு கட்டுப்பட்டு, கட்சி முன்னெடுக்கும் செயற்பாட்டை முன்னிலைப்படுத்தி செயற்பட வேண்டிய நிலைக்கே தள்ளப்பட்டனர்.

அதனையும் தாண்டி சிலர் தமது சுயநல தேவைகளை மையப்படுத்தியே செயற்பட்டனர். இன்று நாடு மீள முடியாத பிரச்சினைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. இவ்வாறான சூழலிலும், கட்சி அரசியலை முன்னிலைப்படுத்துவதே பிரதானமாக நடைபெறுகின்றது.

கட்சித் தலைவர்களிடையில் உடன்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வது, தமது கட்சியின் பெரும்பான்மையை தக்கவைத்துக்கொள்வது என இந்நிலைமை தொடருகின்றது. இந்நிலைமை மாறி, மக்கள் பிரதிநிதிகள் மக்களையும், நாட்டையும் முன்னிலைப்படுத்தி செயற்பட வேண்டிய காலகட்டம் உருவாகி இருக்கின்றது. கட்சி அரசியலுக்கு அப்பால் சென்று செயற்பட்டாலே இன்று நாம் விழுந்திருக்கும் அதலபாதாளத்திலிருந்து மீள எழமுடியும். – எனத் தெரிவித்தார்.

# எரிபொருள் கொள்வனவு; ரஷ்யாவுடன் பேசினோம்!

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர தகவல்



எரிபொருள் கொள்வனவு தொடர்பாக ரஷ்யாவுடன் பேச்சு நடத்தப்பட்டதாகவும் ஆனால் ரஷ்யாவிடம் இருந்து இதுவரை எந்த பதிலும் வரவில்லை எனவும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி தனிப்பட்ட முறையில் பேசினார் என அமைச்சர் கூறியுள்ளார்.

ரஷ்யா உட்பட வேறு எந்த நாட்டிலிருந்தும் குறைந்த விலையில் எரிபொருளை பெற்றுக்கொள்ள வாய்ப்பு கிடைத்தால், அதற்காக பாடுபடுவேன் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# மோட்டார் சைக்கிள்களுக்கு 2,500 ரூபாவுக்கு எரிபொருள்!

வாகனங்களின் அடிப்படையில் எரிபொருள் விநியோக நடைமுறை நேற்று (செவ்வாய்க்கிழமை) முதல் அமுலுக்கு வரும் வகையில் மீண்டும் தொடரும் என அமைச்சர் அறிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனைத் தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிளுக்கு அதிகபட்சம் 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கும் ஓட்டோ 3 ஆயிரம் ரூபாவுக்கும் கார், வான்கள் மற்றும் எஸ்யூவிகள் 10 ஆயிரம் ரூபாவுக்கும் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும்.

# இந்தியாவின் நிவாரணப் பொதிகளில் 20 ஆயிரம் பொதிகள் கிளிநொச்சிக்கு!

இலங்கையில் உள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு இந்தியா வழங்கும் நிவாரணப் பொதியில் இருந்து 20 ஆயிரம் பொதிகளை கிளிநொச்சி பிரதேச மக்களுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ்நாட்டு மக்களால் வழங்கப்படும் இந்த நிவாரணப் பொதியில் சுமார் 4 கோடி ரூபாபெறுமதியானஉணவுப்பொட்டலங்கள் அடங்கியுள்ளதுடன், கிளிநொச்சி மக்களின் பொருளாதார வறுமை தொடர்பாக அரசாங்கம் முன்னரே உணர்ந்துகொண்டதன் விளைவாக 20 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணப் பொதி வழங்கப்படவுள்ளதாக அரசாங்க அதிபர் கூறினார்.




இந்த நிவாரணப் பொதிகளை வழங்குவதற்குப் பொருத்தமான நபர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் கிராம மட்டத்தில் நடைபெற்று வருகின்றன எனவும் பொருத்தமான குடும்பங்களைத் தெரிவு செய்வதற்காக கிராம மட்டத்தில் முன்மொழிபவர்கள் மற்றும் அரச அதிகாரிகள் அடங்கிய விசேட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

# தானியங்களுக்குப் பாரிய தட்டுப்பாடுகள்; மூடப்பட்டது 'திரிபோஷா' தொழிற்சாலை!

தானியங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக அரசாங்கத்துக்கு சொந்தமான 'திரிபோஷா' தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது.

இலங்கையில் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்படும் ஊட்டச்சத்து உணவே திரிபோஷா ஆகும்.

சோளம் மற்றும் சோயா விநியோகம் முற்றிலும் தடைப்பட்டுள்ள நிலையில் திரிபோஷாவை உற்பத்தி செய்வதில் பிரச்சினை எழுந்துள்ளது.

இருப்பினும் இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்துக்குள் சோளம் அறுவடை செய்யப்பட்டவுடன் புதிய இருப்புகளை பெற்றுக்கொள்ளலாம் என அதிகாரிகள் எதிர்பார்த்துள்ளனர்.

இதேவேளை நாடு முழுவதும் உள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தைகளை ஊட்டச்சத்து குறைபாடு பாதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊட்டச்சத்து குறைபாடு மிக சிக்கலான பிரச்சினையாக எதிர்காலத்தில் மாறும் அபாயத்தை இலங்கை எதிர்கொள்கிறது என வைத்தியர் ஜெயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.

# மே 9 தாக்குதலில் பொலிஸ் அதிகாரிகளை தாக்கியோரால் துப்பாக்கியும் கொள்ளையாம்!

## விசாரணைகளில் வெளிவந்த பகீர் தகவல்

அமைதி போராட்டக்காரர்கள் மீது ஆளும் கட்சி ஆதரவாளர்கள் மூர்க்கத்தனமாக நடத்திய தாக்குதலை தொடர்ந்து, கடந்த மே 9 ஆம் திகதி நாடெங்கும் பதிவான வன்முறைகளில், கொழும்பு 10, மாளிகாவத்தை பொலிஸ் பிரிவில் – பஞ்சிகாவத்தை பகுதியில் வைத்து உயர் பொலிஸ் அதிகாரிகள் இருவரை தாக்கி, அவர்களது வாகனங்களை சேதப்படுத்தி, அதற்கு தீ வைத்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் இந்த சம்பவத்தின் போது, வன்முறையாளர்கள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கடமை நேர துப்பாக்கியை கொள்ளையடித்து சென்றுள்ளமை தொடர்பிலான தகவல்கள் தற்போது விசாரணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் குறித்த துப்பாக்கி இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இந் நிலையில் விசாரணைகளில், இது தொடர்பாகக் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில், விசாரணைகளை ஆரம்பித்துள்ள சி.ஐ.டி.யினர் அச்சம்பவம் தொடர்பில் கடந்த 22 ஆம் திகதி மருதானை பகுதியைச் சேர்ந்த 28 வயதான ஒருவரைக் கைது செய்துள்ளனர். அவ்வாறு கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் காரிலிருந்து கழற்றி எடுக்கப்பட்டதாக நம்பப்படும் உதிரிப்பாகம் ஒன்றை சி.ஐ.டி.யினர் கைப்பற்றியிருந்தனர்.

கடந்த மே 9 ஆம் திகதி பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரும் (டி.ஐ.ஜி.), சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (எஸ்.எஸ்.பி.) ஒருவரும் பயணித்த பொலிஸ் திணைக்களத்துக்கு சொந்தமான இரு கார்கள், பஞ்சிகாவத்தை சுற்று வட்டம் அருகே ஒன்று கூடியிருந்தோரால் நிறுத்தப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்போது அதில் பயணித்த இரு உயர் பொலிஸ் அதிகாரிகளும் தாக்கப்பட்டுள்ளதுடன், அதில் காயமடைந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இன்னும் பொலிஸ் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றார். இவ்வாறான நிலையில், வாகனங்களை சேதப்படுத்திய பின்னர், அங்கிருந்த வன்முறையாளர்கள், வாகனத்தின் பாகங்களை கழற்றி எடுத்துவிட்டு எஞ்சிய பகுதிக்கு தீ வைத்துள்ளனர்.

இது தொடர்பாக மாளிகாவத்தை பொலிஸாரும் கொழும்பு மத்தி வலய குற்றத் தடுப்புப் பிரிவும் விசாரணைகளை நடத்தி வந்த நிலையிலேயே பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கு அமைய அந்த விசாரணைகள் சி.ஐ.டிக்கு கையளிக்கப்பட்டுள்ளன. அதன்படியே முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் தற்போது ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை சி.ஐ.டியினர் தொடர்ந்து முன்னெடுத்துள்ளனர்.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# புலம்பெயர் மக்களின் எதிரொலியும் தாக்கமும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் -20

ஊடகங்களின் அனுமானங்களின் படி, ராஜபக்ஷக்களுக்கு சர்வதேசத்தின் ஊடாக ஓர் பாதை வகுப்பது ரணிலோடு இருந்த ஒரு டீல் என்பது பற்றியும், அதற்காக ரணில் பின்புலத்தில் மாலை



தீவின் முன்னைய ஜனாதிபதியின் ஆதரவோடு ஒரு குழுவை அமைத்துள்ளார் என்பது பற்றியும் குறிப்பிட்டிருந்தேன்.

நேற்று மாலை ஊர்ஜிதப்படுத்தப்பட்ட செய்திகளின் பிரகாரம், அந்த நோக்கங்களின் அடிப்படையில் மாலைதீவு நாடாளுமன்றத்தின் சபாநாயகர் நஸீட் ஸ்ரீலங்காவுக்குப் பயணம் வந்து மஹிந்தவைச் சந்தித்து அவை பற்றிப் பேசியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ தனது குடும்பத்தினரை அவரது நண்பர் சம்பா முகமது மூசா (உச்சுகு) என்பவரின் வீடுகளில் தங்க வைக்கவே ஏற்பாடுகள் செய்திருந்தார். உச்சுகு மாலைதீவின் உல்லாசத் துறையில் பெருமளவு பங்கு வகிப்பவர். ஆனால் உச்சுகு நம்பிக்கை வைக்க தகுந்தவர் அல்லர், ஆதலால் அவரை விடுத்து வேறு ஒருவரின் சொத்துக்களை வாங்க நஸீட் அறிவுறுத்தி உள்ளார்.

அது, இந்தியர் சோனு சிவதசானி என்பவருடன் தொடர்புடையது. சோனு சிவதசானி நஸீட்டுக்கு மிகவும் வேண்டப்பட்டவர். அதே சமயம் இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சியுடன் நல்ல தொடர்புகளைப்பேணுபவர். இந்தவிற்பனையின்



ஏற்பாடுகளை அடுத்து நஸீட் நாட்டின் முக்கிய தலைவர்களையும் – முக்கியமாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் – சந்தித்துப் பேசியிருக்கிறார். பழிவாங்கலுக்கு இடமளிக்காது, அவர்கள் (ராஜபக்ஷக்கள்) பாதுகாப்பாக இருப்பதற்கு ஒத்துழைப்பு தரும்படியும், அப்படியான உதவிகள் நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு வலு தரும் எனவும் அறிவுறுத்தியுள்ளார். நடக்கும் இந்த ஏற்பாடுகள், மஹிந்த, கோட்டா இருவரும் தற்சமயம் நாட்டில் எதிர்நோக்கும் அரசியல் பிரச்சினைகளில் இருந்து விலகி, சிறிது காலம் வெளியேறி, அவற்றை அவதானித்து, மீள் திட்டமிடுவதற்காக மட்டுமல்ல, இதன் ஊடாக அவர்கள்மாலைதீவில்பாதுகாக்கப்பட்டு, சர்வதேசக் குற்றங்கள் எவற்றிற்கும், அந்த நாட்டில் இருக்கும் வரை அவர்களை வெளியேறக் கோராத உத்தரவாதங்களோடு அவர்களைக் குடியேற்றக் காய்கள் நகர்த்தப்படுகின்றன.

இத்தகைய ஏற்பாடுகள் தத்தமது நாடுகளினால் சுயநலன்களுக்காக செய்யப்படாதவை அல்ல. ஸ்ரீலங்காவை அடுத்து சீனாவுடனான பலப்பரீட்சையில் மாலைதீவு ஒரு முத்தாக சுற்றியுள்ள நாடுகளால் – முக்கியமாக இந்தியாவாலும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடுகளினாலும் – கவனிக்கப்படுகின்றது. ஆகவே மாலைதீவைத் தங்களது நேசத்தில் அனுசரணையாக வைத்திருப்பதில் ராஜபக்ஷக்களும் தாயக் கட்டைகளாக உருட்டப்படலாம்.

அடுத்து காலிமுகத்திடல் 'கோட்டா கோ ஹோம்' என்னவாகும் என்பது. இதுவரையில் மஹிந்த வெளியேறியமையைத் தவிர போராட்டக்காரர்களின் எதிர்பார்ப்பு எதுவுமே நிறைவேற்றப்படவில்லை.

'ஒரு ஸ்திரமான நிலைக்கு நாடு வந்துள்ளது, அதிலிருந்து நாட்டைப் பொருளாதார மீட்சிப் பாதையில் அழைத்துச் செல்வதுதான் முக்கியம்' என்று ரணில் பேசுகிறார். தான் பதவியேற்றமையால், தனது அனுபவங்களின் அடிப்படையில், பல நாடுகள் அந்தப் பொருளாதார மீட்சிக்கு உதவ வந்துள்ளன எனவும் ஆதாரம் காட்டுகிறார். தான் 'கோட்டா கோ ஹோம்' போராட்டக்காரர்களுக்கு எதிரானவன் அல்லன், கருத்து, பேச்சு சுதந்திரங்களை மதிப்பவன், அவை எப்போதுமே பாதுகாக்கப்பட வேண்டும் எனக் கருதுபவன் என்று அறிவிக்கிறார். அது மட்டுமல்லாமல் அதனை பாதுகாப்பதற்காகக் கொழும்பு மேயர் ரோஸி சேனநாயக்காவின் தலைமையில் குழு ஒன்றையும் அமைத்து உள்ளார்.

லண்டனில் ஹைட் பார்க் கோணர் என்று ஹைட் பார்க் பூங்காவின் ஒரு பகுதி உண்டு. இந்த முகப்பில், அங்கு வரும் எவரும் எந்த அரசியல் கட்சி, அதன் கொள்கைகள், தலைவர்கள், வெளிநாட்டு உறவுகள் குறித்து யாரையும் பற்றியும் எதுவும் பேசலாம். ஒருவரைதவிர. அதுநாட்டின்மகாராணியார்.

அப்படிப் பேசுவதற்கு எதிராக, அது எதுவானாலும், சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. சுவாரசியமானது அல்லது முக்கியமானது என்றால் சில சமயம் செய்திகளாகும். ஹைட் பார்க் கோணரில் என்ன பேசப்பட்டாலும் அது



அரசாங்கச் செயற்பாடுகளை பாதிப்பதில்லை. அவை இயங்கிக் கொண்டே இருக்கும். ஆக, ஒரு விதத்தில் ரணில் கூட காலிமுகத்திடல் போராட்டத்தை இந்த நாட்டின் ஹைட் பார்க் கோணராக வளர்க்க விரும்புகிறார்.

உங்களுக்கு எல்லாக் கருத்து, பேச்சு சுதந்திரங்களும் இருக்கின்றன, அதனை நீங்கள் செய்யலாம், ஆனால் பொருளாதார மீட்சி என்ற பாதையில் நாடும் தனது அரசாங்கமும் முன்னேறிக் கொண்டே போகும், அதை தடுப்பதற்கு இல்லை என்பதும் மிகத்தெளிவாகப் பேசப்பட்டுள்ளது. அந்தச் செய்திகளோடு ரணில் வழமைபோலவே அதனுள் (கோட்டா கோ ஹோம் போராட்டத்துக்குள்) உள்நுழைந்தே பலவீனப்படுத்த திட்டம் போட்டுள்ளார்.

ராஜபக்ஷக்களின் உதவிகளோடு, அவர்களுக்குக் கலையான வாங்கி, விற்பதிலும், கட்சிகளை பிரித்து வசூல் பண்ணுவதிலும் ஈடுபட்டு, சஜித்தின் கட்சியிலேயே கை வைத்துள்ளார். கோட்டா கோ ஹோம்போராட்டக்காரர்கள் அவர்களின் வழியிலேயே விட்டு, அந்தப் போராட்ட முறைமை பிரயோசனமற்ற காட்டி, அவர்களிடையேபிரிவினைகளைஆக்க,அரசு ஆதரவாளர்கள் தயாரிக்கப்பட்டு அத்தகையோர் புகுத்தப்படுகிறார்கள்.

இன்னொரு வழியும் நடக்கிறது. கோட்டாவின் பிரத்தியேக புலனாய்வாளர்கள் இந்தப் போராட்டத்தின் முன்னணியிலும் பின்னணியிலும் நிற்கின்றவர்களை மோப்பம் பிடித்து, அவர்களை நாளும் பொழுதும் விசாரணைக்கு அழைத்து, அவர்களின் வாழ்க்கையைச் சீர்குலைக்கிறார்கள். இது 1970 ஆம் ஆண்டு தொடங்கிய காலங்களில் தமிழ் மாணவர் பேரவை, இளைஞர் பேரவை அங்கத்தினர்களை நடத்திய விதம் போன்றதுதான். இவற்றால் இந்தப் போராளிகள் தங்களது ஊர்களில் தங்கியிருப்பது பாதுகாப்பற்றது எனக் கருதி காலிமுகத்திடலிலேயே மற்றவருடன் சேர்ந்து கூட்டாக வாழுகிறார்கள். அப்படி வாழ்வதற்கு ரோஸி சேனநாயக்க போன்றவர்கள் உணவு மற்ற வசதிகளை செய்து தரலாம். ஆனால் இவர்கள் எவ்வளவுகாலம்தான் இப்படிபோராடுவார்கள்? தங்களது ஊர்களுக்கு போகாமல் இருப்பார்கள்? எனக் கொக்கின் தலையில் வெண்ணை வைத்து பிடிக்கும் நோக்கமும் ரணிலுக்கு உண்டு.

விஜயதாஸ ராஜபக்ஷ முன்னெடுக்கும் 21 ஆவது அரசமைப்புத் திருத்த முயற்சி கண்துடைப்புத்தான் எனவும், அது பொதுமக்கள் வேண்டிய முக்கிய திருத்தங்களை கொண்டிருக்கவில்லை என்பதும் தெளிவாகி உள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூட இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இடித்துரைத்து உள்ளது. அமைச்சுக்களின் செயலாளர்களை நியமனம் செய்தல், மாகாண ஆளுநர்களை நியமித்தல், தூதுவர்கள் மற்றும் தூதரகத் தலைவர்களை நியமித்தல் போன்றவற்றை அமைச்சரவையினதும் பிரதமரினதும் கலந்துரையாடலுடந்தான் ஜனாதிபதி செய்ய வேண்டும் என்ற ஏற்பாடு 21 ஆவதுதிருத்தத்தின்கீழ்கொண்டுவரப்பட வேண்டும் என்று சட்டத்தரணிகள் சங்கம் கேட்டிருக்கின்றது. அந்த மாற்றங்கள் வந்தால் மாகாண ஆளுநர்களைத் தன்னிச்சையாக – தனது கொள்கைகளையும் அதிகாரங்களையும் நிலைநிறுத்தும் வகையிலும் – வழிநடத்த ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்காது. அது, மாகாண சபைகள் சுயாதீனமாக இயங்க பெரும் வசதியாக இருக்கும் என நம்பப்படுகிறது. வடக்கு, கிழக்கின் அதிகாரத்தை கையளிக்க விரும்பாததால் இவையெல்லாம் 20 ஆம் திருத்த ஏற்பாடுகளின் படியே மீள வருகின்றன.

இவை இப்படி வளர சடுதியாக சுமந்திரன் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளால் ஏற்படுத்தப்பட்ட மாநாடு ஒன்றுக்கு நெதர்லாந்தின் தலைநகர் ஆம்ஸ்டர்டாம் போயிருக்கிறார் என்றும், அவர் அப்படி போய் இருப்பதாலும் அந்தக் கூட்டத்திற்கு சர்வதேச குற்றவியல் வழக்கு தொடுநரும் பங்குபற்றுவதால் ஏதோ உடனடியாக நடக்கப்போவது போன்ற பிரேமைகள் ஏற்படுத்தப்படுகின்றன. அவை அணுகுமுறையானவையா அல்லது கருத்துக்களா எனப் பார்ப்போம்.

(வளரும்)

